සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික , ක්ෂුද්‍ර මූල්‍ය , ස්වයං රැකියා හා ව්‍යාපාර සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார,நுண்நிதிய, சுயதொழில்,மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment and Business Development


| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/02/AD/05/SDS/EB/2020 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ........................................... | දිනය<br>திகதி<br>Date | 2020.12.10 |
|---|---|---|---|---|---|

சகல மாவட்டச் செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிக
பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்
பிரதேச செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொருட்டு நடாத்தப்படும் Iவது வினைத்திறன் <u>தடைதாண்டல் பரீட்சை – 2020</u>**

மேற்படி விடயம் தொடர்பில் எனது சம இலக்கமும் 2020-12-04ம் திகதியிடப்பட்டதுமான Iவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை தொடர்பான அறிவித்தலுக்கு மேலதிகமாக

02. மேற்படி கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத வகுதி 2 சேவைத் தொகுதியின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான Iவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் தங்களது கவனத்தினைச் செலுத்துமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

- ❖ மேற்படி பரீட்சையினை 2021 ஜனவரி மாதம் 23ம் திகதி சனிக்கிழமை தினத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ❖ இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது Iவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றாத உத்தியோகத்தர்களும் மேற்படி பரீட்சையில் தோற்ற முடியும்.

- ❖ இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தோற்றியிருந்தும் அச் சந்தர்ப்பத்தில் தடைதாண்டல் பரீட்சையில் தேறாத உத்தியோகத்தர்களும் மேற்படி பரீட்சைக்கு தோற்ற முடியும்.

- ❖ இதற்கு முன்னர் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தோற்றி இதில் ஒரு பாடத்தில் தேறாத உத்தியோகத்தர்களுக்கும் அப்பாடத்தின் பொருட்டு இச் சந்தர்ப்பத்தில் விண்ணப்பிக்க முடியும்.

- ❖ இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் நடைபெற்ற வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் IIவது தரத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட புள்ளிகள் வரையறையானது (35) இன் கீழ் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய

உத்தியோகத்தர்கள் Iவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவதனால் அவர்கள் இப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவசியமில்லை.

03. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தங்களது மாவட்டத்தின் / பிரதேச செயலகப் பிரிவின் சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் விளக்கமளிக்குமாறு அறியத் தருகின்றேன்.

04. இப் பரீட்சையினை நடாத்துவதற்கு தங்களது மாவட்டத்தின் பொருத்தமான இடமொன்றினை நேர காலத்துடன் ஒதுக்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத் தருகின்றேன்.

ஆர்.பீ.பி.திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்

01. செயலாளர்கள், சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு

02. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - அ.கொ.பொருட்டு

03. தலைமைக் காரியாலயத்தின் சகல பிரிவுத் தலைவர்கள் - அ.கொ.பொருட்டும் உ.ந.பொருட்டும்